Toronto
District
School
Board

5050 Yonge Street, Toronto, Ontario M2N 5N8 • Tel: (416) 397-3000

**Tamil**

21 ஜனவரி,2008

அன்பிற்குரிய மாணவரே மற்றும் பொற்றோரே/ பாதுகவலரே:

ரொறன்ரோ மாவட்ட பாடசாலைச்சபை (TDSB) முன்னோடி மாணவர் பாதுகாப்பு இணைப்பு , 416-395-SAFE (7233) ஒன்றினை மேற்கொண்டுள்ளதாக இன்று அறிவித்துள்ளது.

தங்களது நம்பிக்கைக்குரிய வயதானவர் ஒருவருடன் உரையாடுமாறு நாம் மாணவர்களை எப்பொழுதும் ஊக்கப் படுத்தினாலும் கூட, மாணவர்கள் பாடசாலையோடு தொடர்பான அல்லது தமது சுய பாதுகாப்புடனான மனக்குறைகளை தெரிவிக்க உதவுதற்கான முன் முயற்சியாகவே மாணவர் பாதுகாப்பு இணைப்பினை TDSB நிறுவியுள்ளது.

TDSB மாணவர் பாதுகாப்பு இணைப்பு மிக அந்தரங்கமாக TDSB மாணவர்கள அறிவிக்கக கூடிய ஒரு இணைப்பு. தனது பெயரினை சொல்வதற்கு மாணவர் விரும்பினால் அல்லது தனிப்பட்ட சொந்த தகவலைக் கொடுத்தால் அன்றி செய்திகள் யாவும் அனாமதேயமானதாகவே இருக்கும். தகவல் யாவும் அந்தரங்கமாகவே செயல் படுத்தப்படும். மாணவர் பாதுகாப்பு இணைப்பினிலே யாரேனும் அறியாதவாறு அல்லது யாரென்றே தெரியாதவாறு குரல் செய்தி ஒன்றினை மாணவர்கள் பதிந்து விட முடியும்.

TDSB மாணவர் பாதுகாப்பு இணைப்பின முக்கியத்துவம் மற்றும் நோக்கம் பற்றி பாடசாலை நிர்வாகம் மாணவர்களுக்கு அறிவிக்கும் .TDSB மாணவர் பாதுகாப்பு இணைப்புப் பற்றி மேலதிக தகவல் பாடசாலை அலுவலகங்களிலும் [www.tdsb.on.ca/395SAFE](http://www.tdsb.on.ca/395SAFE). எனும TDSB யின் இணையதளத்திலும் உள்ளது. உங்கள் பாடசாலையின் பெற்றோர் சபைக் கூட்டத்தின் போது பாடசாலை பாதுகாப்புப் பிரச்சினைகள் பற்றிப் பேசுவதற்கான ஒரு வாய்ப்பு உங்களுக்குக் கிடைக்கும்.
எமது பாடசாலைகளை, பாதுகாப்பு மிக்க, கண்ணியம் நிறைந்த, அதிகம் பேணும் கல்விச் சூழல் உடையவையாக ஆக்க உதவி எமது மாணவர்கள் யாபேரும் சிறந்த பெறுபேறுகளை ஈட்ட மாணவர் பாதுகாப்பு இணைப்பு உதவும் என நம்புவோமாக.

விசுவாசமிக்க,

ஜோன் காம்பெல்,கல்விச்சபைத் தலைவர். ஜெறி கொன்னெல்லி, கல்விப் பணிப்பாளர்.

**முக்கியம்:** அவசர நிலை ஏற்பட்டால் மாணவர்கள் 9-1-1.யே தொடர்பு கொள்ள வேண்டும். சிறார்களுக்கு உதவும் தொலைபேசியை(1-800-668-6868) ஆலோசனை உதவிக்கு மாணவர்கள் அழைக்கலாம். குற்றவியல் சம்பந்தமான தகவல் அறிவிக்க வேண்டுமாயின் மாணவர்கள் (416-222-TIPS) குற்றவியல் நிறுத்திகளை அழைக்கலாம். TDSB மாணவர் பாதுகாப்பு இணைப்பு (416-395-SAFE) பாடசாலை சம்பந்தமான பாதுகாப்புக் குறைபாடுகளைப்பற்றி அறிவிப்பதற்கு மேலும் ஒரு விருப்பத்தேர்வினை வழங்குகிறது.

Student
SAFETY LINE
416-395-SAFE(7233)
Toronto District School Board